கடந்த ஒரு மாதத்தில் தி.வெ.க.வினர் செய்த குற்றச் சம்பவங்கள்!

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

ஆற்காடு வீராசாமி பேரன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. புதல்வர் மணவிழா!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

சென்னை, ஜூன் 17 -

முன்னாள் கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களின் பேரன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே.சித்தார்த்தின் திருமணம் இன்று (ஜூன் 17 - புதன்கிழமை) சென்னையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

முன்னாள் கழகப் பொருளாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான ஆற்காடு நா.வீராசாமி - திருமதி. கஸ்தூரி வீராசாமி ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் - கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி ஆகியோரின் புதல்வருமான வி.கே.சித்தார்த்திற்கும் - சென்னை வாழ் ராமசுப்ரமணியன் சுந்தர் - திருமதி. வித்யா ஸ்ரீசுந்தர் ஆகியோரின் மகளான எஸ்.ஆஷ்ரயா காயத்ரிக்கும் திருமண விழா, இன்று (17.6.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை - வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், நே.சிற்றரசு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் - மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணவிழாவிற்குத் தலைமையேற்று, மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி என். சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., மு.பெ.சாமிநாதன், அந்தியூர் ப.செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்,

மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ். ரகுபதி எம்.எல்.ஏ., மயிலை த.வேலு, தா.மோ.அன்பரசன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., திருமதி பி.கீதா ஜீவன் உள்ளிட்ட கழக மாவட்டச் செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களும்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன், பொன் தனபால் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றி கூறுகிறார்.

ஈவு இரக்கமற்ற தி.வெ.க.வின் காட்டாட்சி வீழ்வது உறுதி!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜூன் 17 -

த.வெ.க. ஒரு ஈவு, இரக்க மற்ற காட்டாட்சி. அது வீழ்வது உறுதி என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தமிழ் நாட்டில் அதிகரித்து வருவது தொடர்பாகவும் அதிலும் குறிப்பாக நேற்று முன்தினம் (திங்கள்) ஒரே நாளில் நடைபெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பாகவும் தமது சமூக வலைதளப் பக்கத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித்

தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

24 மணி நேரத்தில் 12 பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன.

நீங்கள் appoint செய்ததாக சொன்ன efficient officers என்ன செய்கிறார்கள் முதல மைச்சர் அவர்களே?

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உயிரிழந்த குழந்தைகளைப் பெற்றவர்களுக்குத் தெரியாமலேயே வேறு இடத்தில் அடக்கம் செய்யும் அளவுக்கு **நீங்கள் நடத்தும் ஈவு, இரக்கமற்ற காட்டாட்சி வீழ்வது உறுதி!**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி – நடிகர்

வாகை சந்திரசேகருக்கு 'யுவ புரஸ்கார்' தேசிய விருது!

நாட்டின் உயரிய விருதாகும்!



புதுடெல்லி, ஜூன் 17 -

ஒன்றிய அரசின் சங்கீத நாடக அகாடமி 'யுவ புரஸ்கார்' தேசிய விருதினை நடிகர் வாகை சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கியுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:

மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி "யுவ புரஸ்கார்' தேசிய விருது நடிகர் வாகை சந்திரசேகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சங்கீத நாடக அகாடமி விருது (Sangeet Natak Akademi Puraskar) இந்தியாவின் இசை, நடனம், நாடகம் மற்றும் நாட்டுப்புறக் கலைகளுக்கு வழங்கப்படும் மிக உயரிய தேசிய விருதாகும்

இசை, நடனம், நாடகம், பாரம்பரிய /நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பொம்மலாட்டம் கலைகளுக்கான ஒட்டுமொத்த பங்களிப்பு அல்லது ஆராய்ச்சி என 5 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழகக் கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.